# வேளாண்மை – உழவர் நலத்துறை



மானியக் கோரிக்கை
எண் – 5



# அறிவிப்புகள்

## 2022 – 2023

# வேளாண்மை – உழவர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 5

## அறிவிப்புகள்
## 2022 – 2023

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

# வேளாண்மை – உழவர் நலத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில், 2022-2023 ஆம் ஆண்டில் 15 புதிய அறிவிப்புகளை ரூபாய் 104 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

1. விளை நிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்திடவும், 2022-2023 ஆம் ஆண்டில் நெல் தரிசில் பயறு சாகுபடி திட்டம் பத்து இலட்சம் ஏக்கரில் ரூ. 40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

வேளாண் விளை நிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடவும், சம்பா நெல் அறுவடைக்குப்பின், உளுந்து, பச்சைப்பயறு பத்து இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்திட ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் மானியம் வழங்குவதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் தமிழகத்தின் பயறு உற்பத்தி இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயரும் என்பதுடன், 12 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர்.

2. செங்கல்ராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளுக்கு அரவை இயந்திர பகுதிக்கு, தேவையான கியர் பாக்ஸ்கள் (Planetary Gear Box) இரண்டு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

செங்கல்ராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் கோள்கல பல்சக்கர பெட்டிகளில் பழுது ஏற்பட்டுள்ளதால், கரும்பு அரவைக்கு அதிக நேரமாகிறது. எனவே, 2022-2023 ஆம் ஆண்டில் இவ்விரு ஆலைகளும் பயன்பெறும் வகையில், இரண்டு கியர் பாக்ஸ்கள் இரண்டு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.



3. வேலூர், அறிஞர் அண்ணா, தருமபுரி சர்க்கரை ஆலைகளின் அரவை இயந்திர மின் மோட்டாரை கட்டுப்படுத்தும் கருவிகளும், செங்கல்ராயன், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு, பல் சக்கரத்துடன் கூடிய அழுத்த உருளையின் (Toothed Roller Pressure Feeder) மின் மோட்டாரை கட்டுப்படுத்தும் கருவியும் 2022-2023 ஆம் ஆண்டில் இரண்டு கோடியே ஏழு இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

2022-2023 ஆம் ஆண்டில் வேலூர், அறிஞர் அண்ணா, தருமபுரி சர்க்கரை ஆலைகளில் அரவை இயந்திர மின் மோட்டாரை கட்டுப்படுத்தும் கருவிகளும், செங்கல்ராயன், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு, பல் சக்கரத்துடன் கூடிய அழுத்த உருளையின் (Toothed Roller Pressure Feeder) மின் மோட்டாரை கட்டுப்படுத்தும் கருவியும், இரண்டு கோடியே ஏழு இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

4. கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2, செங்கல்ராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் புதிய உருளை கொள்முதல் செய்யவும், கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2, எம்.ஆர்.கே. செங்கல்ராயன், தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவைப்பகுதியினை தானியங்கி மயமாக்கவும் 2022-2023 ஆம் ஆண்டில் மூன்று கோடியே 81 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2, செங்கல்ராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் புதிய உருளை கொள்முதல் செய்யவும், கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2 எம். ஆர். கே, செங்கல்ராயன் மற்றும் தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அரவைப் பணியினை முழுமையாக தானியங்கி மயமாக்கவும், 2022-2023 ஆம் ஆண்டில் மூன்று கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.



5. 2022-2023 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் கொதிகலன் நீரேற்றும் பம்பும், தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை நிலைய மின் மோட்டாரும் ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

சர்க்கரை ஆலைகளில் விரைவில் அரவைப்பணி மேற்கொள்வதற்கு செய்யார், வேலூர், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைகளுக்கும் பொதுவாக கொதிகலன் நீரேற்றும் பம்பு ஒன்று அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையிலும், வேலூர், அறிஞர் அண்ணா, தருமபுரி சர்க்கரை ஆலைகளுக்கும் பொதுவாக ஒரு புதிய உதிரி 500 கிலோ வாட் மின் மோட்டார் தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் நிறுவுவதற்கு 2022-2023 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி செலவிடப்படும்.

6. 2022-2023 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி-1 சர்க்கரை ஆலையில் வளி அழுத்த முறையில் இயங்கும் பேன் (Pan) திறப்பு தடுக்கிதழ் (Valve) 92 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

வளி அழுத்த முறையில் இயங்கும் பேன் (pan) மூலம் திறப்பு தடுக்கிதழ் இயக்கத்தை எளிமைப்படுத்த, 2022-2023 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் 31 இலட்சம் ரூபாய் செலவிலும், பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 35 இலட்சம் ரூபாய் செலவிலும், கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 26 இலட்சம் ரூபாய் செலவிலும், ஆக மொத்தம் 92 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.



7. கரும்பு, தானியத்திலிருந்து எத்தனால் தயாரிப்பினை ஊக்கப்படுத்தி, எத்தனால் ஆலை தொடர்ச்சியாக இயங்கும் வகையில், நாளொன்றுக்கு 80 ஆயிரம் லிட்டர் திறனுடன் எத்தனால் ஆலையினை பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்விட பத்து இலட்சம் ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

சர்க்கரை ஆலையின் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன், கரும்பு, தானியத்திலிருந்து எத்தனால் தயாரித்து, தொடர்ந்து எத்தனால் ஆலை இயங்கும் வகையில், எரியூட்டு கொதிகலன் அடிப்படையில் கழிவுநீர் ஏதும் வெளியேறாத வகையில், நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட எத்தனால் ஆலையினை பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் அமைப்பதற்கு பொருளாதாரரீதியில் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்திட 2022-2023 ஆம் ஆண்டில் பத்து இலட்சம் ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

8. மதுரை மாவட்ட, அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய 2022-2023 ஆம் ஆண்டில் குழு அமைக்கப்படும்.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் அமைந்துள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை 2019-20 ஆம் ஆண்டு முதல் இயங்காமல் இருப்பதால், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்த ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள, 2022-2023 ஆம் ஆண்டில் குழு ஒன்று அமைக்கப்படும்.



9. 2022-2023 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் மா மகத்துவ மையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லி மகத்துவ மையமும் ஆறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

மா, நெல்லியில் அதிக மகசூல் தரும் இரகங்களை சேகரித்து, பாதுகாத்து, தரமான நடவுச்செடிகளை உற்பத்தி செய்யவும், சாகுபடி முதல் மதிப்புக்கூட்டுதல் வரையிலான உயர் தொழில்நுட்பங்கள் பற்றி செயல்விளக்கம் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்திடவும், 2022-2023 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் மா மகத்துவ மையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லி மகத்துவ மையமும் ஆறு கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும்.

10. தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடியினை அதிகரித்திட, 2022-2023 ஆம் ஆண்டில் நான்கு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் முந்திரி மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்படும்.

உள்நாடு, வெளிநாடுகளில் முந்திரிக்கான சந்தை வாய்ப்பு அதிகரித்து வரும் நிலையில், அரியலூர், கடலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தரிசு நிலங்களில் உயர் விளைச்சல் இரகக் கன்றுகள் விநியோகம், அடர் நடவு, பயிர்ப் பாதுகாப்பு போன்ற நவீன சாகுபடி முறைகள் மூலம் ஐந்தாயிரம் ஏக்கரில் முந்திரி சாகுபடியினை அதிகரிக்கவும், முந்திரி பழம், பருப்பை பிரித்தெடுக்கும் கருவி மற்றும் இயந்திரங்களை மானியத்தில் வழங்கவும், 2022-2023 ஆம் ஆண்டில் முந்திரி மேம்பாட்டு இயக்கம் நான்கு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.



11. தமிழகத்தில் வெங்காய சாகுபடிப் பரப்பினை உயர்த்தியும், வெங்காய சேமிப்பு அமைப்புகளை உருவாக்கியும், பொது மக்களுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி வெங்காயம் கிடைக்கும் வகையில், 2022-2023 ஆம் ஆண்டில் வெங்காய சாகுபடி இயக்கம் 40 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

தமிழக மக்களுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி வெங்காயம் கிடைக்கும் வகையில், 27,170 ஏக்கரில், விதை, இடுபொருட்களுக்கு ஏக்கருக்கு ரூ. 8,000 வீதம் மானியம் வழங்கியும், அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தினை சேமித்து வைத்து, தேவையான போது சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக, மானியத்தில் வெங்காய சேமிப்பு அமைப்புகள் அமைக்கவும், 2022-2023 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் செலவில் வெங்காய சாகுபடி இயக்கம் செயல்படுத்தப்படும்.

12. கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டாரத்தில் 2022-2023 ஆம் ஆண்டில் பலா மதிப்பு கூட்டும் மையம் ரூ. 3.75 கோடி செலவில் அமைக்கப்படும்.

பண்ருட்டி வட்டாரத்தில் 1,442 ஏக்கர் பரப்பளவில் பலா சாகுபடி செய்யப்படுகிறது. பலா விவசாயிகளின் வருமானம் உயரும் வகையில், சேமியா, பாஸ்தா, ஜாம், தேன், உலர் பலாப் பழத்துண்டுகள், ஸ்குவாஷ், ஜெல்லி, சாக்லேட், கேக், ஒயின், ஐஸ்கிரீம்கள் போன்று மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பினை ஊக்குவித்து, உள்நாட்டு சந்தைகள் மட்டுமின்றி சர்வதேச ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக, 2022-2023 ஆம் ஆண்டில் பலா மதிப்பு கூட்டும் மையம் மூன்று கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.



13. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்களை சிறு தானியம், பயறு வகைப் பயிர்களையும் அறுவடை செய்வதற்கு ஏதுவாக 2022-2023 ஆம் ஆண்டில் 18 இலட்சம் ரூபாய் செலவில் 25 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் மாற்றி வடிவமைக்கப்படும்.

நெல் அறுவடை மட்டுமல்லாது, சிறு தானியங்கள், பயறு வகைப் பயிர்களையும் அறுவடை செய்வதற்கு ஏதுவாக, 2022-2023 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள 25 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் 18 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றி வடிவமைத்து, விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கப்படும்.

14. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களின் பயன்பாட்டினை கண்காணிக்க, 2022-2023 ஆம் ஆண்டில் புவியியல் தகவல் நிலை அறியும் ஜிபிஎஸ் கருவிகள் 44 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வரும் வேளாண் இயந்திரங்களின் செயல்பாட்டினை துல்லியமாக கண்காணிக்க, 2022-2023 ஆம் ஆண்டில் 343 வேளாண் இயந்திரங்களில் புவியியல் தகவல் நிலை அறியும் கருவிகள் (GPS) 44 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.



15. நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த, 2022-2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, செயல்விளக்கங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும்.

பகுதிக்கேற்ற நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள், வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்துகொள்ளும் வகையில், விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த, 2022-2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, செயல்விளக்கங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும்.